**59 நரியைப் பரியாக்கிய படலம்**

வாதவூரான் கூறிய படி பரிகள் வராததால் அரிமர்த்தன பாண்டியன்
 மிகவும் கோபம் கொண்டுகாவளாளிகளிடம் வாதவூரானை கடுமை
யாக தண்டிக்கும் படி கட்டளையிட்டான்.
மாணிக் கவாசகரை எரிக்கும் வெய்யிலில் நிறுத்தினர். அதற்கும்
மாணிக்கவாசகர் அசையவில்லை. கைகளிலும் கால்களிலும்
பூட்டிட்டு துன்புறுத்தினர். அவனின் மேல்பெரும் சுமைஏற்றினர்.
மாணிக்க வாசகன் சிவனை தஞ்ச ம்அடைந்தான்.

ஐயனின் திருவடிகளை நினைத்ததும் அவை பெருஞ்சுமையாக தோன்
றவில்லை எல்லாக்கொடுமைகளையும் இறைவன் நாமத்தைச்
 சொல்லியே தாங்கிக் கொண்டான் பின் கொடிய சிறையில் அவரைத்
தள்ளினர் காவலாளிகள். வாதவூரான் ஐயன் நாமத்தைக் கூறிக்கொ
ண்டே இருந்தான்.

அவரை சிறையிலிருந்து காக்க திருவுள்ளம் கொண்ட ஐயன் சிவ
கணங்களை அழைத்துகாட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கி ஓட்டி
வரும் படி  தானும்  ஓர்  குதிரைக்காரனாக  நரியைப்பரியாக்கி
ஆயுதங்களு டன்  நின்ற  பூதகணங்களுடன் வாள்  ஏந்தி வேதமாகிய
குதிரையின்  மீது எழுந்தருளினார்.

ஐயன் மாயக்குதிரையில் நடுவே செல்ல குதிரைக் கூட்டம் மேற்கு தி
சையை நோக்கி நடந்தன. குதிரை வருகையினால் எங்கும் புழிதி படல
ம் பதிந்தது.  குதிரையின் கனைப்பு கடல் அலைபோல் ஒலித்தது. குதி
ரை வரும் விவரத்தை அறிந்த மன்னன் மகிழ்ந்து குதிரைகளை எதிர்க்
கொண்டு அழைக்க காத்திருந்தான். சிறுது நேரம் கடந்தப் பின் குதி
ரைகள் வந்து சேர்ந்தன. அகமகிழ்ந்து மன்னன் வாதவூரானை வாழ்ந்தி
னான்.  இறைவனே  கடிவாளத்தைக்  கையில்
 பிடித்து குதிரையின் சிறப்பை மன்னனுக்கு எடுத்துக்கூறினார். சிவக
ணங்களும் அவ்வாறே செய்தன. அவர்களிடம் அவர்களது தலைவன்
யார் என்றுமன்னன் வினவ, அவர்களும் இறைவனைக் காட்டினார்கள்.
மன்னனும் தன் இருக்கைவிட்டுஎழுந்து கை குவித்து வணங்கினான்.

வீரனாகவந்தசோமசுந்தரர்பாண்டியமன்னனிடம்,
மன்னனுடையபொருட்களைஎல்லாம்தன்னிடம்கொடுத்ததால்,
தான்மனிதர்களுக்குகிடைப்பதற்குஅறியதானகுதிரைகளைஅவர்களு
க்குஅளித்ததாகக்கூறினார்.
மேலும்அக்குதிரைகளை ஒப்படைத்த பின் நாளை எதுநேர்ந்தாலும் அத
ற்கு தான் பொறுப்பு ஏற்க முடியாது என்றும் கூறினார்.

கயிறுமாறும்பொழுதுசிவபெருமான்மன்னனுக்கு,
குதிரையின்இலக்கணங்களைக்கூறிகுதிரையைசெலுத்திகாட்டினார்.
மற்றவீரர்களும்அவ்வாறேசெய்தனர்.

வழக்கப்படிமன்னன்குதிரையைபூஜித்தப்பின்அதன்இருப்பிடத்தில்சேர்க்கப்பட்டன.

சிவபெருமான்மன்னன்அளித்தபட்டாடையைமகிழ்வுடன்அணிந்தார். எல்லாக்குதிரைவீரர்களுக்கும்பரிசளித்தான்மன்னன். அதன்பின்குதிரைவீரர்களோடுதலைவனும்மறைந்தார். பாண்டியன்வாதவூரானுக்குவரிசைகள்பலசெய்தான்.

சோமசுந்தரரும்திருக்கோயிலடைந்துமீனாட்சிஅம்மையாருக்குதன்திருவிளையாடலைக்கூறிஇனிதேவீற்றிருந்தார்.

**பல்லவி**

சொன்னபடி பரிகள் வராமையால் அமைச்சரை
அரசனும் கடுமையாக தண்டிக்கச் சொன்னான்

**அனுபல்லவி**

மன்னன் சினம் தணிய சிவகணங்களைக் கொண்டு
நரிகளை யெல்லாம் சேர்த்து பரிகளாக்கிடச் சொன்னீர்

**சரணம்**

சிவகணங்கள் எல்லாம் குதிரைச் சேவர்களாய்
வேதமாகிய குதிரையின் மீது எழுந்தருளினீர்
எவரும் வியக்கும் குதிரையை மன்னனிடம்
கொடுத்து இன்றுடன் இதன் கணக்கு தீர்ந்தது என்றீர்